

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாமல்லபுரத்தில் 3.8.2025 முதல் 12.8.2025 வரை தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட 4 –ஆவது ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று முன்தினம் (12.8.2025) பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, சர்வதேச அலைச்சறுக்கு சங்கத்தின் துணைத்தலைவர் மற்றும் தலைவர் ALAS கரின் சியர்ரால்டா (Karin sierralta), ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் பொதுச்செயலாளர் ஷு மியாபெ (Shu Miyabe), இந்திய அலைச்சறுக்கு கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாமல்லபுரத்தில் 3.8.2025 முதல் 12.8.2025 வரை தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட 4–ஆவது ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று முன்தினம் (12.8.2025) பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்வில் குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, , மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, சர்வதேச அலைச்சறுக்கு சங்கத்தின் துணைத்தலைவர் மற்றும் தலைவர் ALAS கரின் சியர்ரால்டா (Karin sierralta), ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் பொதுச்செயலாளர் ஷு மியாபெ (Shu Miyabe), இந்திய அலைச்சறுக்கு கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு தொடர்ந்து பல்வேறு முன்னெடுப்புகளை எடுக்க கழக அரசு உறுதி!

# இந்திய அளவில் அதிக சர்ஃபிங் சாம்பியன்களை உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடுதான்!

### ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் ஷிப் நிறைவு விழாவில்– பரிசுகள் வழங்கி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

*சென்னை,ஆக.14-*

***சென்னை மாமல்லபுரம், ராடிசன் ஹோட்டலில், ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப் போட்டி-2025 நிறைவு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கி வாழ்த்திப்பேசினார்.***

***துணைமுதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:***

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்.

ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப் போட்டியின் நிறைவு விழாவில், உங்களை எல்லாம் சந்திப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. நம் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, இந்தியாவில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தி ஊக்குவிப்பதில், என்றைக்குமே முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிய சர்பிங் சாம்பியன்ஷி போட்டி-2025 போன்ற பல முக்கிய விளையாட்டு நிகழ்வுகளுக்கு நம் அரசு ஆதரவளித்துள்ளது, இதுபோன்ற முயற்சிகளின் பலனைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

**அதிக சாம்பியன்கள்**

கடந்த நான்கு ஆண்டுகளில், அலைச்சறுக்கு விளையாட்டை ஊக்குவிப்பதற்காக ரூ.6.78 கோடி நிதியுதவியை வழங்கியுள்ளது தமிழ்நாடு அரசு. இதன் மூலம், உலக சர்பிங் லீக்-க்யூஎஸ்- 3000, ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப்-2025 உள்ளிட்ட பல உயர் சிறப்புவாய்ந்த சர்பிங் போட்டிகளை நம்மால் நடத்த முடிந்துள்ளது. இன்று, இந்திய அளவில் அதிக சர்பிங் சாம்பியன்களை உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.




இந்த ஆண்டிற்கான சாம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.3.3 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது. இந்திய சர்பிங் வரலாற்றில் முதல் முறையாக, இந்திய வீரர் ரமேஷ் புதிஹால், ஆசிய சர்பிங் சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்றுள்ளார். இது தமிழ்நாட்டின் கடற்கரையில் நிகழ்ந்தது பெருமிதமளிக்கிறது.

ஆண்கள் ஓபன் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய வீரர் ரமேஷ் புதிஹாலுக்கு அனைவரது சார்பாக என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் பல அபாரமான ஆட்டங்களையும் பார்த்தோம். ஆண்கள் ஓபன் தரவரிசையில், இந்திய அணி , இந்தோனேஷியா மற்றும் தென் கொரியாவுக்கு அடுத்ததாக 3-வது இடத்தைப் பிடித்துள்ளது.

**வயதை மீறிய சாதனை**

மேலும் கோவளத்தைச் சேர்ந்த கிஷோர் அரையிறுதிக்கும், ஸ்ரீகாந்த் காலிறுதிக்கும் முன்னேறி சாதனை படைத்துள்ளனர். 18 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில், 13 வயதேயான கோவளத்தைச் சேர்ந்த ஹரீஷ் காலிறுதிக்கு முன்னேறியது வயதை மீறிய சாதனையாக கருதப்படுகிறது.

இந்தியாவின் சாதனைகளைத் தாண்டி ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த வீரர்களிடமிருந்து உலகத் தரம் வாய்ந்த ஆட்டங்களை காணமுடிந்தது. 17 வயதே நிரம்பிய கொரியாவின் கன்னாவ் ஹீஜெய், ஆண்கள் ஓபன் மற்றும் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பதக்கம் வென்று இரட்டை மகுடம் சூடியுள்ளார். மகளிர் ஓபன் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற ஜப்பானை சேர்ந்த அன்ரி மட்ஸுனோ-வுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிற்கான போட்டிகளில், 19 நாடுகளைச் சேர்ந்த 112 அலைச்சறுக்கு வீரர்கள், 25 நடுவர்கள் உட்பட 60 அதிகாரிகளின் பங்கேற்புடன் சிறப்பாக நடந்தேறியுள்ளது.

அதிகளவிலான வீரர்களின் பங்கேற்பும், அவர்கள் வெளிப்படுத்திய உற்சாக மூட்டும் ஆட்டமும் தமிழ்நாட்டில் சர்பிங் விளையாட்டை மேம்படுத்தும் எங்கள் முயற்சி சரியான பாதையில் செல்கிறது என்ற நம்பிக்கையை வழங்கியுள்ளது.

**மக்களின் பேரன்பு**

தொலை தூரத்திலிருந்து வந்து போட்டிகளில் பங்கேற்ற அனைத்து வீரர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் இயற்கை எழிலையும், மக்களின் பேரன்பையும், அவர்களித்த விருந்தோம்பலையும் நீங்கள் அனுபவித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் விளையாட்டு துறை வளர்ச்சிக்காக தொடர்ந்து, பல்வேறு முன்னெடுப்புகளை எடுக்க நம் அரசு உறுதிப்பாட்டுடன் இருப்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சாம்பியன்ஷிப் போட்டியை சிறப்பாக நடத்த உதவிய அனைத்து வீரர்கள், ஏற்பாட்டாளர்கள், மற்றும் பங்காற்றிய அனைவருக்கும் நன்றி.

தமிழ்நாட்டின் இனிய நினைவுகளுடன் நீங்கள் நாடு திரும்புவீர்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர் ராஜா, வி.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்த குமாரி, கூடுதல் முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை உறுப்பினர்-செயலர் ஜே.மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் சினேகா ஐ.ஏ.எஸ்., டென்னிஸ் வீரர் சோம்தேவ் தேவர்மன் சர்வதேச அலைசறுக்கு சங்க துணைத் தலைவர் கரின் சியரால்டா, பொதுச் செயலாளர் ஷு மியாபே, இந்திய அலைச்சறுக்கு சங்கத் தலைவர் அருண் வாசு, தமிழ்நாடு அலைச்சறுக்கு சங்கத் தலைவர் சித்தார்த் ஹாண்டே துணைத் தலைவர் வீரபாகு மற்றும் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

# மாநிலக் கல்விக் கொள்கை 2025-ன் மீதான கருத்துகளுக்கு பள்ளிக் கல்வித் துறை விளக்கம்!

சென்னை,ஆக.14–

மாநிலக் கல்விக் கொள்கை 2025– மீது தெரிவிக்கப்படும் பல்வேறு கருத்துகளுக்கு பள்ளிக் கல்வித்துறை அளித்துள்ள விளக்கம் வருமாறு:

**1.கொள்கை வடிவமைப்பின் அடிப்படை நோக்குகளை மீறல்**

விளக்கம்:

மாநிலக் கல்விக் கொள்கை 2025–ஆனது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் டி. முருகேசன் தலைமையில் கல்வியாளர்கள், பாடத்திட்ட நிபுணர்கள், பள்ளி நிர்வாகிகள் மற்றும் மாநிலக் கல்வித் துறை அதிகாரிகள் அடங்கிய உயர் நிலை நிபுணர் குழுவால் உருவாக்கப்பட்டது. இந்தக் குழு, ஆசிரியர்கள், குழந்தைகள் உரிமை அமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs), பெற்றோர் சங்கங்கள் ஆகியோருடன் ஆலோசனைகள் நடத்தியது. மாநிலக் கல்விக் கொள்கை 2025 இல், ”இந்தக் கொள்கை மாற்றங்களுக்கேற்ப திருத்தக் கூடிய வகையில் ‘உயிர்ப்புடன் இருக்கும் ஆவணம் ஆகும். பொதுக் கருத்துகள் அனைத்து தரப்பிலும் இடையறாத முறையில் சேர்க்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கொள்கை வரைவானது தொடர்ச்சியாக நேரிடும்.

**2.தமிழ்நாட்டுக்கு தனித்துவமான கொள்கையாக இல்லை**

**விளக்கம்:**

மாநிலக் கல்விக் கொள்கை 2025, தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவதை வலியுறுத்துகிறது. தேசியக் கல்விக் கொள்கை 2020 (NEP 2020) முன்வைத்த மூன்றுமொழிக் கொள்கையை நிராகரிக்கிறது. மேலும், உயர் கல்வி சேர்க்கைக்கான மையப்படுத்தப்பட்ட தேர்வுகளை எதிர்க்கிறது. தமிழ்நாட்டின் தொன்மையான சமூகநீதி வரலாற்றை ஆழமாக வலியுறுத்துகிறது. மதிய உணவுத் திட்டம், விலையில்லாப் பாடப்புத்தகங்கள்/சீருடைகள் வழங்குதல், பின் தங்கிய மாணவர்களுக்கான உள்ளடக்கிய கல்வி போன்றவற்றை வழங்குவதை முனைப்புடன் செயல்படுத்துகிறது. மேலும், இது உள்ளூர் சமூக–கலாச்சார சூழலை கொள்கை இலக்குகளில் ஒருங்கிணைக்கிறது: ”கல்வி என்பது தமிழ் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதையும், தமிழ் மொழியை மேம்படுத்துவதையும், அதே நேரத்தில் உலகளாவிய ஈடுபாட்டிற்கு மாணவர்களைத் தயார் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**3 & 4. தற்போது நடைமுறையில் உள்ள கொள்கைகளை மறுகட்டமைத்தல் மற்றும் திட்டங்களை பரிந்துரைகளாக மாற்றுதல்**

**விளக்கம்:**

சிறப்பான நலத்திட்டங்கள், கற்றல் திட்டங்களில் சமவாய்ப்பளித்தல் மற்றும்அணுக்கத்தினை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கான வழிமுறையாகும். இது வெற்று மறுகட்டமைக்கப்பட்ட ஆவணம் இல்லை. மாநிலக் கல்விக் கொள்கை 2025 இல் உள்ள புதுமைகள்:

எண்ணும் எழுத்தும் இயக்கத்தினை ஒன்றாம் வகுப்பிற்கான ஆயத்த நிலைக்கு நீட்டித்தல்

செறிவூட்டப்பட்ட தொழிற்கல்வி கலைத்திட்டம், செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்சாலை உள்ளகப் பயிற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

பள்ளியில் எண்ணிம (Digital) உள்கட்டமைப்பு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இணைய வழி ஆசிரியர் வளத்தங்களோடு மேம்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இக்கொள்கை இலக்கு மட்டும் ஒருங்கிணைத்தலை மேம்படுத்துவதுடன் நிரூபிக்கப்பட்டுள்ள முன்னெடுப்புகளை வலியுறுத்திகிறது.

**5. தனித்துவமான முதன்மை தொலைநோக்கினை வளர்ப்பதில் தோல்வியடைந்துள்ளது**

**விளக்கம்:**

தேவையான தொலைநோக்கு: ஒவ்வொரு குழந்தையின் திறமைகளை வளர்த்து, மாணவர்களை 21ஆம் நூற்றாண்டிற்கு திறன் மிக்கமானவர்களாக்கி வளர்ந்து வரும் உலகில் பரிவுள்ள, நம்பிக்கையுள்ள மற்றும் பொறுப்புள்ள குடிமக்களாக வாழ்தல். கூர் சிந்தனை, படைப்பாற்றல், பிரச்சனைகளை தீர்த்தல் மற்றும் பிரச்சனைகளிலிருந்து மீண்டு வருதல் ஆகிய திறன்களை வளர்க்கும் முதன்மையான முன்னெடுப்புகள் உள்ளன. இவை தமிழ்நாட்டின் பண்பாட்டு மற்றும் மொழிசார் தொன்மை ஆகியவற்றை மதித்து எதிர்காலத்திற்கு தயாராகும் திறன்களோடு ஒத்துப் போகின்றன.

**6 & 7. செயலிகள் தளங்கள் வாயிலாக அதீத மையப் படுத்துதல்**

**விளக்கம்:**

கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (EMIS), TN–SPARK, பள்ளி பார்வை ஆகிய எண்ணியத் தளங்கள் தரவுகள் மேலாண்மை மற்றும் வெளிப்படைத் தன்மை கொண்ட கருவிகளாகும். ஆனால் இவை ஆசிரியர் வகுப்பறை சுதந்திரத்திற்கு மாற்று அல்ல. மாநிலக் கல்விக் கொள்கை 2025, பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மற்றும் உள்ளூர் முடிவெடுத்தலை வலுப்படுத்துகிறது. இது சூழலுக்கேற்ற கற்பித்தல் முறையினை மேம்படுத்துகிறது. வேறுபட்ட கற்போர் தேவைகளுக்கேற்ற வகுப்பறை செயல்பாடுகள், ஆசிரியர் பணித்திறன் மேம்பாடு மூலம் ஆசிரியர்கள் திறன் மிக்கவர்களாக மாற்றப் படுகிறார்கள்.

**8. தேசிய கல்விக் கொள்கை 2020ஐ பிரதிபலித்தல்**

**விளக்கம்:**

தேசிய கல்விக் கொள்கையின் மும்மொழிக் கொள்கை, மையப்படுத்தப்பட்ட தேர்வுகள் மற்றும் இளங்கலை மாணவர் சேர்க்கைக்கு பொது நுழைவுத் தேர்வு ஆகியவற்றை மாநிலக் கல்விக் கொள்கை 2025 வெளிப்படையாக மறுக்கிறது. 10 + 2 அமைப்பினையும், மாநில கலைத்திட்ட கட்டுப்பாட்டுடன் தொடர்ந்து தக்க வைத்துள்ளது. நலத்திட்டங்கள் மற்றும் சமூக நீதி ஆகியன தேசிய கல்விக் கொள்கையில் இடம் பெறவில்லை. ஆனால் இவை மாநிலக் கல்விக் கொள்கையின் முக்கியக் கூறுகளாகும்.

**9. சமவாய்ப்பளித்தல், பன்முகத்தன்மை, சமூக நீதி ஆகியன பாதிப்பிற்குள்ளாகி உள்ளது**

**விளக்கம்:**

சாதகமான மாணவர்–ஆசிரியர் விகிதத்தினை அடைய ஆசிரியர் நியமனத்தை இக்கொள்கை வலுப்படுத்துகிறது. பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக உள்ள மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பினை முதன்மைப்படுத்தி, உள்ளடங்கிய வகுப்பறை வளங்களை மேம்படுத்துகிறது. குறைவான மொத்த சேர்க்கை வீதம் உள்ள மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, விளிம்பு நிலைப் பிரிவினர்களிடையே சேர்க்கை இடைவெளிகள் குறைக்கப்படுவதை வலியுறுத்துகிறது.

**10 & 11. தனியார் மயமாதலை ஊக்குவிக்கிறது மற்றும் நிதி தொடர்பான உறுதிபாடின்மை**

**விளக்கம்:**

மாநிலக் கல்விக் கொள்கை 2025, பொதுக் கல்வியை முதுகெலும்பாக வலியுறுத்தி, கல்வி மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படுதலுக்கு அறைகூவல் விடுக்கிறது – தனியார் மயமாதலுக்கு எதிரானது. சமுதாய/ நிறுவன சமூகப் பொறுப்புணர்வு, ஈடுபாடு ஒரு கூடுதல் செயல்பாடு மட்டுமே. இது மாநில நிதியளித்தலுக்கு மாற்றல்ல. நிதி சார்ந்த குறிப்புகள், வரவுள்ள செயல் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்ட கட்டமைப்பில் நெகிழ்வுத் தன்மை மற்றும் அக்கறை ஆகியன இடம்பெற்றுள்ளன.

**12 & 13. சாதிய சமநிலை இன்மையை புறக்கணிக்கிறது. வேறுபட்ட பணிகளுக்கு மாறுதலுக்கான எந்த திட்டமும் இடம்பெறவில்லை.**

**விளக்கம்:**

மாநில கல்விக் கொள்கை 2025இல் சாதிய பிரிவுகளில் மொத்த சேர்க்கை வீதம் மற்றும் இடைநிற்றல் வீதத்தை வெளிப்படையாகக் கூறி, வேறுபாடுகள், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இடை வினைகளை கட்டாயமாக நடைமுறைப்படுத்துதல் ஆகியன இடம்பெற்றுள்ளன. தொழிற்கல்வி, வளர்ந்து வரும் தொழிற்சாலைகளோடு இணைக்கப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு, பசுமைப் பணிகள், தொழில் முனைவோர்களுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றில் விளிம்பு நிலையில் உள்ள மாணவர்களுக்கு பணி வாய்ப்புகளிக்கான பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**14. சிறுபான்மையோர் கல்வி உரிமைகள் உறுதிப்படுத்தப்படவில்லை**

**விளக்கம்:**

இரு மொழிக் கொள்கை சிறுபான்மையோர் மொழி உரிமைகளை பாதுகாக்கிறது. மதச்சார்பின்மை, மாநிலக் கல்வியில் பொதிந்துள்ள அரசியலமைப்பு விழுமியமாகும். மாநில கல்விக் கொள்கை 2025 எந்த ஒரு பகுதியும் சிறுபான்மையினர் பாதுகாப்பினை குறைக்கவில்லை. சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்து வாய்ப்பு மறுக்கப்பட்ட குழுவினர்களிடம் உள்ள கற்றல் இடைவெளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு கல்வி உதவி மற்றும் குறைதீர் கற்றல் ஆகியவற்றை வழங்கி உள்ளடங்கிய நிலையினை மாநில கல்விக் கொள்கை 2025 உறுதி செய்கிறது.

**15. இக்கொள்கையை திரும்பப் பெறப்பட வேண்டும்**

**விளக்கம்:**

மாநில கல்விக் கொள்கை 2025, மாநிலம் சார்ந்த உள்ளடங்கிய மையப்படுத்துதலுக்கு எதிரான கல்விக் கட்டமைப்பாகும். இது தமிழ்நாட்டின் கல்வித் தனித்துவத்தைப் பாதுகாத்து உலகளாவிய சவால்களுக்கு கற்போரைத் தயார் செய்கிறது. இது சிறந்த உலக நடைமுறைகளின் வழியில் தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட, அளவிடப்படும் செயல் திட்டங்களினால் வளர்க்கப்பட்ட வலுவான அடித்தளத்தை வழங்குகிறது.

**முடிவுரை**

மாநிலக் கல்விக் கொள்கை 2025 மாநில சுயாட்சியினை நிலை நிறுத்தி, சமூக நீதியினை வலுப்படுத்தி, நலத்திட்டங்களை மேம்படுத்தி, எதிர்காலத்திற்கான கலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, இதன் ’உயிர்ப்பு ஆவணம்’ அணுகுமுறை மூலம் நெகிழ்வுத் தன்மையினை உறுதி செய்கிறது. பேராசிரியர் ஜவஹர் நேசன் அவர்கள் குறைபாடுகள் என்று குறிப்பிட்டுள்ளவை, விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட தெரிவுகள் ஆகும். மாறாக இக்கொள்கை, அணுக்கமாகவும், மாற்றத்திற்கு உட்பட்டதாகவும், தமிழ்நாட்டின் சூழலில் வேறூன்றப்பட்டதாகவும் உள்ளது. மேலும் இதனை நடைமுறைப் படுத்துவதற்கான செயல்திட்டத்தில் இதன் உட்கூறுகளை அளந்தளித்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பள்ளிக் கல்வித்துறை விளக்கம் அளித்துள்ளது.